நவம்பர்
2019

விண்மீன்.காம்

# முதலாவது வார நடப்பு நிகழ்வுகள்

01 நவம்பர் – 07 நவம்பர்

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்

**1. MITஇல் உள்ள அப்துல் இலத்தீப் ஜமீல் வறுமை ஒழிப்பு ஆய்வகத்துடன் (J–PAL) கூட்டுசேர முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) மேற்கு வங்கம்

B) பீகார்

**C) ஒடிசா ☑**

D) உத்தர பிரதேசம்

✓ மாநிலத்தின் பல்வேறு துறைகள் சார்ந்த வறுமை ஒழிப்புத்திட்டங்களின் தாக்கத்தை அதிகரிப்பதற்காக நோபல்பரிசுபெற்ற அபிஜித் பானர்ஜி மற்றும் எஸ்தர் டுப்லோ ஆகியோரால் நிறுவப்பட்ட அப்துல் இலத்தீப் ஜமீல் வறுமை ஒழிப்பு ஆய்வகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒடிசா மாநில அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது. 5T (Teamwork, Technology, Transparency, Time leading to Transformation) முயற்சியின் ஒருபகுதியாக, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

**2. நடப்பாண்டில் வரும் உலக நகரங்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

A) Designed to Live Together

B) Inclusive Cities, Shared Development

**C) Changing the world ☑**

D) Promoting a better urban future




✓ உலகளாவிய நகரமயமாக்கலில் ஆர்வங்கொண்ட சர்வதேச சமூகங்ககளை ஊக்குவிப்பதற்காகவும் நகரமயமாக்கலில் சவால்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு நல்குவதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் அக்.31 அன்று ஐ.நா அமைப்பின் உலக நகரங்கள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ "Changing the world: innovations and better life for future generations" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். "Better City, Better Life" என்பது இந்நாளுக்கு வழங்கப்பெறும் பொதுவான கருப்பொருளாகும்.

**3. ஜப்பானில், 2019 சோசோ (ZoZo) சாம்பியன்ஷிப்பை வென்ற கோல்ப் வீரர் யார்?**

A) அனிர்பன் லஹிரி

B) ஜோதி ரந்தவா

C) ககன்ஜீத் புல்லர்

**D) டைகர் உட்ஸ் ☑**



✓ ஜப்பானில் நடந்த 2019 சோசோ சாம்பியன்ஷிப் போட்டியில், அமெரிக்காவின் டைகர் உட்ஸ் பட்டத்தை வென்றார். இது அவரது 82ஆவது PGA சுற்றுப்பயண பட்டமாகும். இதன்மூலம், இச்சுற்றுப்பயணத்தில்

அதிக பட்டங்களைப் பெற்ற சாம் ஸ்னீடின் (அமெரிக்கா) சாதனைகளை அவர் சமன் செய்துள்ளார். இந்தப் போட்டிக்கான பரிசுத்தொகை $9.75 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும்.

**4. "நெகிழிக்குப்பைகளுக்கு ஈடாக உணவு" என்றவொரு புதிய முயற்சியை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) தமிழ்நாடு

**B) ஒடிசா ☑**

C) ஜார்க்கண்ட்

D) மேற்கு வங்கம்



✓ நெகிழி பயன்பாட்டால் ஏற்படும் அபாயங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக, கோராபுத் மாவட்டத்தில் உள்ள கோட்பாட் நோட்டிஃபைடு ஏரியா கவுன்சிலானது ஒரு கிலோ நெகிழிக் குப்பைகளுக்கு ஈடாக ஏழைகளுக்கு இலவச உணவை வழங்கிவருகிறது. இது, ஒடிசா மாநில அரசின் 'ஆகார்' திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

✓ ஒடிசா மாநில அரசாங்கத்தின் 'ஆகார்' திட்டத்தின்கீழ், நகர்ப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்கு ₹5 செலவில் அரிசி மற்றும் காய்கறிகளுடன் கூடிய பயறு அடங்கிய உணவு வழங்கப்படுகிறது.

**5.அண்மையில் காலமான ஜான் விதர்ஸ்பூன், எந்த நாட்டைச் சேர்ந்த பிரபல நகைச்சுவை நடிகராவார்?**

**A) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**

B) நியூசிலாந்து

C) ஜப்பான்

D) பிரான்ஸ்



✓ 'Friday' & 'The Wayan Brothers' ஆகிய நகைச்சுவை நாடகத்தில் நடித்தமைக்காக மிகவும் பிரபலமாக அறியப்பட்ட நகைச்சுவை நடிகரான ஜான் விதர்ஸ்பூன் (77), அக்.30 அன்று காலமானார். 'Hollywood Shuffle', 'Boomerang', 'Vampire in Brooklyn', 'I'm Gonna Get You Sucka', 'Bird' மற்றும் 'The Meteor Man' உள்ளிட்டவை அவர் நடித்த சில திரைப்படங்களாகும்.

**6.அண்மையில் ISA கட்டமைப்பின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட புனித கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஆகியவை எந்தப் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடுகளாகும்?**

A) பசிபிக் பெருங்கடல்

B) இந்தியப் பெருங்கடல்

C) ஆர்டிக் பெருங்கடல்

**D) அட்லாண்டிக் பெருங்கடல் ☑**



- ✓ புது தில்லியில் நடந்த அதன் ISAஇன் இரண்டாவது கூட்டத்தில், எரித்ரியா மற்றும் புனித கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஆகிய நாடுகள் சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணியின் (ISA) கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன்மூலம், ISA கட்டமைப்பின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளின் எண்ணிக்கை 83 ஆக மாறியுள்ளது.

- ✓ இந்தக் கூட்டத்தில் பேசிய ISAஇன் தலைவரான R K சிங், (மின்சாரம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் அமைச்சர்) சூரிய ஆற்றலின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

**7.அண்மையில் காலமான கிரிஜா கிர், எந்த மொழிசார்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர்?**



A) தமிழ்

**B) மராத்தி ☑**

C) தெலுங்கு

D) ஒடியா

- ✓ பிரபல மராத்தி எழுத்தாளரான கிரிஜா கிர் (86), அக்.31 அன்று பாந்த்ராவில் காலமானார். பல நாவல்கள், கதைகள், பயணக்குறிப்புகள் மற்றும் சிறார்களுக்கான நூல்களை அவர் எழுதியுள்ளார். 1968–1978 வரை 'அனுராதா' இதழில் உதவியாசிரியராகவும் அவர் பணியாற்றினார்.

**8. UNESCO, இந்தியாவின் எந்த நகரத்தை 'Creative City of Gastronomy' என அறிவித்துள்ளது?**



A) மும்பை

B) சென்னை

**C) ஹைதராபாத் ☑**

D) வாரணாசி

- ✓ நடப்பாண்டு (அக்.31) உலக நகரங்கள் நாளன்று ஐ.நா கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பால் (UNESCO) தேர்ந்தெடுக்கப்பட்ட 66 நகரங்களில் மும்பை மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விரு நகரங்களையும் UNESCO தனது 'படைப்பாக்க நகரங்கள் – Creative Cities' வலையமைப்பில் சேர்த்துள்ளது.

- ✓ மும்பை திரைப்பட நகரமாகவும் (Creative City of Films) ஹைதராபாத் அறுசுவை உணவு நகரமாகவும் (Creative City of Gastronomy) அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, இந்திய நகரங்களான சென்னை, வாரணாசி ஆகியவை இசை நகரங்களாகவும் (Creative City of Music), ஜெய்ப்பூர் – கைவினை மற்றும் நாட்டுப்புறக்கலை நகரமாகவும் (Creative City of Handicrafts & Folks) பட்டியலிடப்பட்டுள்ளன.

**9.உலக சிக்கன நாள் (World Thrift Day) கடைப்பிடிக்கப்படும் எது?**



**A) அக்டோபர் 30 ☑** B) அக்டோபர் 31

C) அக்டோபர் 29 D) அக்டோபர் 28

✓ மக்களிடம் சிக்கனத்தின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் நோக்கில், ஒவ்வோர் ஆண்டும் அக்.30 அன்று இந்தியாவில் (அக்.31 அன்று உலகளவில்) உலக சிக்கன நாள் கொண்டாடப்படுகிறது.

**10. 35ஆவது ASEAN உச்சிமாநாட்டில் பங்கேற்கும் இந்திய தூதுக்குழுவை வழிநடத்துவது யார்?**

A) இராம்நாத் கோவிந்த்

B) வெங்கையா

**C) நரேந்திர மோடி ☑**

D) இராஜ்நாத் சிங்

✓ அக்.31 தொடங்கி நவ.4 வரை பாங்காக்கில் 35ஆவது ASEAN உச்சிமாநாடு நடைபெறுகிறது. இதனை தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான்–ஓ–சா, IMPACT மாநாட்டு வளாகத்தில் தொடங்கிவைத்தார். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN) என்பது தென்கிழக்காசிய பிராந்தியத்தில் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக–ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் 10 உறுப்புநாடுகளின் கூட்டணியாகும். நவ.3, 4 ஆகிய தேதிகளில் நடைபெறும் இவ்வுச்சி மாநாட்டில் பிரதமர் மோடி கலந்துகொள்வார்.

✓ "Advancing Partnership for Sustainability" என்பது இந்த உச்சிமாநாட்டின் கருப்பொருளாகும். 5 நாட்கள் நடக்கும் இவ்வுச்சிமாநாட்டின்போது கிழக்காசியா உச்சிமாநாடு (EAS) மற்றும் பிராந்திய விரிவான பொருளாதார உச்சிமாநாடு ஆகியவை நடைபெறும். இந்தியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், கொரிய குடியரசு, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து உள்ளிட்ட எட்டு பேச்சுவார்த்தை கூட்டாளர் நாடுகளின் தலைவர்களைத்தவிர 10 ASEAN நாடுகளின் தலைவர்களும் இதில் பங்கேற்கின்றனர்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ தமிழ்நாடு நாள் – நவம்பர் 1.

✓ கீழடி அகழாய்வில் கிடைத்த பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக ₹12.21 கோடி செலவில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கொந்தகை கிராமத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. தமிழர்களின் பண்பாடு, தொன்மை குறித்து அறிந்துகொள்ளும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது.

✓ தஞ்சாவூர் பெரிய கோவிலைச் சுற்றியுள்ள அகழியும், கோட்டைச்சுவரும் 'பொலிவுறு நகரம்' திட்டத்தின் கீழ் ₹180 கோடி மதிப்பில் சீரமைக்கப்படவுள்ளன. தஞ்சாவூர் நகராட்சி கடந்த 2014இல் மாநகராட்சியாக தரமுயர்த்தப்பட்டது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. இஸ்ரோவுடன் இணைந்து விண்வெளி தொழில்நுட்ப மையத்தை அமைப்பதற்கு முடிவு செய்துள்ள IIT எது?**

**A) ஐஐடி தில்லி ☑**

B) ஐஐடி கான்பூர்

C) ஐஐடி பாம்பே

D) ஐஐடி சென்னை

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (ISRO) உதவியுடன் தில்லியில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (ஐஐடி) விண்வெளி தொழில்நுட்ப மையம் அமைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. விண்வெளி தொழில்நுட்பத் துறையில் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக இந்த மையம் செயல்படும். செயற்கை நுண்ணறிவு, நானோ தொழில்நுட்பம், செயல்பணி ஜவுளி (functional textiles) உள்ளிட்ட எந்தவொரு துறையிலும், ஓர் ஆராய்ச்சி நிறுவனமாக ஐஐடி தில்லியானது இஸ்ரோவின் கல்விப்பங்காளராக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. எந்த நகரத்தில், "eCAPA 2019" என்ற அறிவுசார் குறைபாடுடைய திறமையாளர்களுக்கான இந்தியாவின் முதல் கலை கண்காட்சி தொடங்கியுள்ளது?**

A) கான்பூர்

B) கொச்சி

**C) புது தில்லி ☑**

D) டேராடூன்



✓ டௌன் நோய்க்குறி, ஆட்டிசம், மனநல குறைபாடு, வலிப்புத்தாக்கக் கோளாறு மற்றும் டிஸ்லெக்ஸியா ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கான இந்தியாவின் முதல் கலை கண்காட்சியானது நவ.2 அன்று புது தில்லியில் தொடங்கியது.

✓ "eCAPA 2019 – Art from the Heart" என்பது அத்தகைய கலைஞர்கள் அவர்களின் திறமையை வெளிப்படுத்துவதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. இந்தக் கண்காட்சி நவ.14ஆம் தேதி வரை சத்தர்பூர் பண்ணைகளின் STIR அரங்கில் நடைபெறும்.

**3. சிலி விலகிய பின்னர் ஐ.நா.வின் காலநிலை மாற்ற மாநாட்டை (COP 25) நடத்தும் நகரம் எது?**

A) நியூயார்க்

B) பாரிஸ்

**C) மாட்ரிட் ☑**

D) புது தில்லி

- ✓ ஸ்பெயினானது மாட்ரிடில் வரும் டிச.2–13 வரை காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டை (COP 25) நடத்தவுள்ளது. இந்த அறிவிப்பை ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற நிர்வாக செயலாளர் பாட்ரிசியா எஸ்பினோசா வெளியிட்டார்.

- ✓ சிலி அரசாங்கத்திற்கு எதிரான தேசிய அமைதியின்மை காரணமாக சிலி இந்த நிகழ்வை நடத்துவதில் இருந்து விலக முடிவு செய்ததை அடுத்து, மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்ட அதே தேதிகளில் COP 25ஐ மாட்ரிட்டில் நடத்த ஸ்பெயின் முன்வந்தது. நாட்டின் அமைதியின்மையைக் கருத்தில் கொண்டு COP 25 மாநாட்டை நடத்தவில்லை என்ற முடிவை அக்.30 அன்று UNFCCக்கு சிலி தெரிவித்திருந்தது.

**4. இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் (IFFI–2019) கூட்டாளராக (partner) இருக்கும் நாடு எது?**

A) ஆப்கானிஸ்தான்

**B) இரஷ்யா ☑**

C) சீனா

D) ஜப்பான்

- ✓ ஐம்பதாவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவானது (IFFI–2019) நவ.20–28 வரை கோவாவில் நடைபெறவுள்ளது. நடப்பாண்டு விழாவில், இரஷ்யா கூட்டாளர் நாடாக (partner country) இருக்கும். இந்நிகழ்வின்போது, நடிகர் இரஜினிகாந்துக்கு, 'Icon of Golden Jubilee' என்னும் விருதும், பிரெஞ்சு நடிகை இசபெல் ஹுப்பெர்டுக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருதும் வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

**5. நடப்பாண்டுக்கான சாஸ்தாராம் விருதை வென்றுள்ளவர் யார்?**

A) M பத்மகுமார்

**B) K P நந்தகுமார் ☑**

C) V A ஸ்ரீகுமார் மேனன்

D) உன்னி மேனன்



- ✓ ஒமியோபதி மருத்துவரும், பரோபகாரியுமான K P நந்தகுமார், வடக்கந்தரத்தில் அமைந்துள்ள தாமரைக் குளம் ஸ்ரீ சபரிமலை ஐயப்ப சுவாமி கோவிலால் நிறுவப்பட்ட நடப்பாண்டின் (2019) சாஸ்தாரம் விருதை வென்றுள்ளார். கலை மற்றும் சமூக–கலாசார துறைகளுக்கு அவர்செய்த பங்களிப்புகளை கருத்தில் கொண்டு, K P நந்தகுமார் இவ்விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

- ✓ ₹25,000 ரொக்கப்பரிசு, ஒரு சான்றிதழ் மற்றும் பாராட்டுப்பத்திரம் உள்ளிட்டவை அடங்கிய இவ்விருது, வரும் டிச.22 அன்று நடைபெறவுள்ள ஒரு விழாவில் K P நந்தகுமாருக்கு வழங்கப்படும்.

**6.2019 இத்தாலிய கோல்டன் மணல்சிற்பக்கலை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய மணல் சிற்பக்கலைஞர் யார்?**

A) மனிஷா ஸ்வங்கர்

B) தன்ராஜ் ஷெல்கே

C) நிதிஷ் பாரதி

**D) சுதர்சன் பட்நாயக் ☑**



✓ புகழ்பெற்ற மணல் சிற்பக்கலைஞரான சுதர்சன் பட்நாயக், நடப்பாண்டுக்கான இத்தாலிய கோல்டன் மணல்சிற்பக்கலை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இத்தாலியில், நவ.13–18 வரை நடைபெறும் சர்வதேச ஸ்கோரானா மணல் நேட்டிவிட்டி போட்டியின்போது அவருக்கு இந்த விருது வழங்கப்படும். மேலும், இந்நிகழ்வில், பட்நாயக் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்துவார்.

**7. ₹250 கோடி நிதி திரட்டுவதற்காக சர்வதேச முன்னாள் மாணவர் நன்கொடை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள ஐஐடி எது?**

**A) ஐஐடி தில்லி ☑**

B) ஐஐடி கான்பூர்

C) ஐஐடி பாம்பே

D) ஐஐடி சென்னை

✓ தில்லி ஐஐடி நிறுவனத்துக்கு ₹250 கோடி நிதி திரட்டும் முன்னாள் மாணவர்கள் நன்கொடை திட்டத்தை இந்திய குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் தொடங்கிவைத்துள்ளார். முதலில் ₹255 கோடிக்கு தொடங்கும் இந்த நன்கொடை திட்டம், வரும் 2020ஆம் ஆண்டில் ₹1000 கோடியாகவும் 2025ஆம் ஆண்டில் ₹7000 கோடியாகவும் படிப்படியாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக முன்னாள் மாணவர்கள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

✓ பிளிப்கார்ட் இணை நிறுவனர்களான பின்னி பன்சால் மற்றும் சச்சின் பன்சால் ஆகியோர் ₹125 கோடி நிதி அளித்துள்ளனர். அவர்களைத் தவிர, பல்வேறு முன்னாள் மாணவர்களிடமிருந்து தலா ₹5 கோடி முதல் ₹25 கோடி வரை நிதி அளித்துள்ளனர்.

**8.எந்த நகரத்தில், சீக்கிய அருங்காட்சியகமும் ஆராய்ச்சி மையமும் அமைக்க மத்திய பிரதேச அரசு முடிவுசெய்துள்ளது?**

A) போபால்

**B) ஜபல்பூர் ☑**

C) இந்தூர்

D) குவாலியர்



✓ சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக் தேவின் 550ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஜபல்பூரில் ₹20 கோடி செலவில் சீக்கிய அருங்காட்சியகமும் ஆராய்ச்சி மையமும் நிறுவுவதற்கு மத்தியப்பிரதேச காங்கிரசு அரசு முடிவெடுத்துள்ளது. இதுதவிர குருநானக் தேவுடன் தொடர்புடைய அம்மாநிலத்தில் உள்ள ஆறு இடங்களை சமய சுற்றுலா தலங்களாக மேம்படுத்தவும் ம.பி அரசு தீர்மானித்துள்ளது.

✓ போபாலில் உள்ள தெக்ரி சாகிப், இந்தூரில் உள்ள இம்லி சாகிப் மற்றும் பெத்மா சாகிப், ஓம்காரேசுவரில் உள்ள குருத்வாரா, உஜ்ஜைனில் உள்ள குருநானக் கத் குருத்வாரா மற்றும் ஜபல்பூரில் உள்ள குவாரி கத் குருத்வாரா ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**9. 'சக்தி–2019' என்னும் இந்தோ–பிரெஞ்சு பயிற்சியானது எந்தப் பிராந்தியத்தில் தொடங்கியது?**



A) உதய்பூர்

B) ஜோத்பூர்

**C) பிகானேர் ☑**

D) ஜெய்ப்பூர்

✓ 'சக்தி–2019' என்பது இந்தியா மற்றும் பிரான்சில் என ஈராண்டுக்கொரு முறை மாறி மாறி நடத்தப்படும் ஒரு பயிற்சியாகும். நடப்பாண்டில், அக்.31 முதல் நவ.13 வரை இந்தியாவில் ராஜஸ்தானின் பிகானேரில் இது நடத்தப்படவுள்ளது. பாலைவனம் போன்ற நிலப்பரப்பின் பின்னணியில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை பயிற்சியளிப்பதில் இது கவனம் செலுத்தும். இரு படைகளுக்கிடையேயான புரிதல், ஒத்துழைப்பு மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**10. SCO உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கவுன்சிலின் நடப்பாண்டு கூட்டம் நடைபெற்ற நகரம் எது?**



**A) தாஷ்கண்ட் ☑**

B) பிஷ்கேக்

C) அஷ்கபாத்

D) பாகு

✓ நவ.1–2 அன்று உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெறும் SCO உறுப்புநாடுகளின் தலைவர்கள் கவுன்சில் (CHG) கூட்டத்தில், இந்தியாவின் சார்பாக பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் பங்கேற்பார். இது, இந்தியா SCO உறுப்பினரான பிறகு நடைபெறும் மூன்றாவது CHG கூட்டமாகும். கடைசி இரண்டு CHG கூட்டங்கள் 30 நவம்பர் – 1 டிசம்பர் 2017 வரை, இரஷ்யாவின் சோச்சியிலும், 2018 11–12 அக்டோபரில் தஜிகிஸ்தானின் துஷான்பேவிலும் நடைபெற்றன.

✓ கூட்டத்தில் பங்கேற்கும் தலைவர்கள், தங்கள் கலந்துரையாடல்களில் SCO பிராந்தியத்தில் பலதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு / பொருளாதார மேம்பாடு குறித்து கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. 'டஸ்ட்லிக்–2019' என்னும் இந்தியா–உஸ்பெகிஸ்தான் இடையிலான முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சியானது எந்தப் பிராந்தியத்தில் தொடங்கப்பட்டுள்ளது?**

A) புகாரா

B) ஷாரிசாப்ஸ்

C) சமர்கண்ட்

**D) தாஷ்கண்ட் ☑**




✓ 'டஸ்ட்லிக்–2019' என்னும் இந்தியா–உஸ்பெகிஸ்தான் இடையிலான முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சியானது தாஷ்கண்டுக்கு அருகேயுள்ள சிர்ச்சிக் பயிற்சிக் களத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் மற்றும் உஸ்பெகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் பகோதிர் நிசாமோவிச் குர்பனோவ் ஆகியோர் இந்த இராணுவப் பயிற்சியைத் தொடங்கி வைத்தனர்.

✓ பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மையமாகக் கொண்ட இந்தப் பயிற்சி நவ.13 வரை தொடரும். இந்தப் பயிற்சியின்போது, உஸ்பெகிஸ்தான் இராணுவத்துடன் இந்திய இராணுவப் படை இணைந்து பயிற்சிபெறும். இப்பயிற்சி, இரு நாடுகளின் ஆயுதப்படைகளுக்கு இடையில் சிறந்த நடைமுறைகள் & அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள உதவும். இந்தியாவும் உஸ்பெகிஸ்தானும் இராணுவ மருத்துவம் மற்றும் இராணுவ கல்வி ஆகிய துறைகளில் 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

**2. ஜப்பானில் நடப்பாண்டுக்கான (2019) ரக்பி உலகக்கோப்பையை வென்ற நாடு எது?**

A) ஜப்பான்

B) இங்கிலாந்து

**C) தென்னாப்பிரிக்கா ☑**

D) சிங்கப்பூர்



✓ நவ.3 அன்று தென்னாப்பிரிக்க அணி இங்கிலாந்து அணியை தோற்கடித்து ரக்பி உலகக்கோப்பையை வென்றது. 2007ஆம் ஆண்டுக்குப்பின்னர் முதல்முறையாக தென்னாப்பிரிக்கா அணி கோப்பையை வென்றுள்ளது. நியூசிலாந்து அணிக்குப்பிறகு 3 உலகக்கோப்பை பட்டங்களை வென்ற இரண்டாவது அணியாக தென்னாப்பிரிக்க அணி உருவெடுத்துள்ளது.

**3. ஜெர்மனியில் நடைபெற்ற 2019 சார்லார்லக்ஸ் ஓப்பன் பூப்பந்து போட்டியில் வென்ற இந்திய விளையாட்டு வீரர் யார்?**

A) ஸ்ரீகாந்த் கிடாம்பி

**B) லக்ஷ்ய சென் ☑**

C) பருபள்ளி காஷ்யப்

D) B சாய் பிரனீத்



- ✓ ஜெர்மனியில் உள்ள சப்ரூக்கனில் நடைபெற்ற சார்லார்லக்ஸ் ஓப்பன் பூப்பந்து போட்டியின் இறுதிப் போட்டியில், சீனாவின் சென் வெங்ஹாங் யாங்கை வீழ்த்தி இந்தியாவின் லக்ஷ்யா சென் வெற்றி பெற்றுள்ளார்.

**4. நிலநடுக்க மீட்புப்பணி குறித்த நடப்பாண்டு (2019) SCO கூட்டுப்பயிற்சியை நடத்தவுள்ள இந்திய அமைப்பு எது?**

**A) NDRF ☑**

B) CISF

C) CRPF

D) BSF

- ✓ நகர்ப்புறங்களில் நிலநடுக்கம் ஏற்படும்போது மேற்கொள்ளவேண்டிய தேடல் & மீட்புப்பணி குறித்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) கூட்டுப்பயிற்சியின் நடப்பாண்டு (2019) பதிப்பை உள்துறை அமைச்சர் அமித்ஷா புது தில்லியில் உள்ள அம்பேத்கர் சர்வதேச மையத்தில் தொடங்கி வைத்தார்.
- ✓ பேரிடர் மீட்பு நடவடிக்கைகளை ஒத்திகை பார்ப்பதற்கும் அறிவு, அனுபவம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பகிர்ந்துகொள்வதற்குமாக இந்த 4 நாள் பயிற்சியை தேசிய பேரிடர் மீட்புப்படை (NDRF) நடத்துகிறது.

**5. ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் காமன்வெல்த் சட்ட அமைச்சர்கள் மாநாடானது அண்மையில் எந்த நகரத்தில் தொடங்கியது?**

A) புது தில்லி

**B) கொழும்பு ☑**

C) டோக்கியோ

D) மாலே



- ✓ ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் காமன்வெல்த் சட்ட அமைச்சர்கள் மாநாடானது "Equal Access to Justice and the Rule of Law" என்னும் கருப்பொருளில் இலங்கையில் உள்ள கொழும்புவில் நவ.4 அன்று தொடங்கியது. இம்மாநாட்டில், மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளார்.
- ✓ காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த சட்ட அமைச்சர்களும் தலைமை வழக்குரைஞர்களும் பங்கேற்கும் இந்த 4 நாள் மாநாட்டில் சட்ட சிக்கல்களைத் தீர்ப்பதில் மில்லியன் கணக்கான மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விவாதிக்கப்படும். நீதிபெறுவதில் பல்வேறு தடைகள் நிலவும் இக்காலகட்டத்தில் நடைபெறும் இந்த நிகழ்வின் முக்கியத்துவம் குறித்து காமன்வெல்த் பொதுச்செயலாளர் பாட்ரிசியா ஸ்காட்லாந்து வலியுறுத்தியுள்ளார்.

**6.ஆசிய பசிபிக் கோல்ப் உச்சிமாநாடு தொடங்கியுள்ள நகரம் எது?**




A) டேராடூன்

B) சிம்லா

**C) குருகிராம் ☑**

D) இலக்னோ

✓ ஆசிய–பசிபிக் கோல்ப் உச்சிமாநாடானது நவ.4 அன்று குருகிராமில் உள்ள DLF கோல்ப் & கன்ட்ரி கிளப்பில் தொடங்கியது. இவ்வுச்சிமாநாடு, 2007ஆம் ஆண்டு முதல் ஆசியாவின் பல்வேறு இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. "5G Technology – A New Mindset" என்பது நடப்பாண்டு (2019) மாநாட்டுக்கான கருப்பொருளாகும். 5G தொழில்நுட்பந்தான் எதிர்கால டிஜிட்டல் & தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களை இயக்கம் என்பதன் அடிப்படையில் இக்கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**7. 'ரெட் அட்லஸ் செயல்திட்ட வரைபடம்' என்றவொன்றை அறிமுகம் செய்துள்ள மத்திய அமைச்சகம் எது?**



A) பாதுகாப்பு அமைச்சகம்

**B) புவி அறிவியல் அமைச்சகம் ☑**

C) வெளியுறவு அமைச்சகம்

D) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

✓ 'ரெட் அட்லஸ் செயல்திட்ட வரைபடம்' மற்றும் சென்னை வெள்ளத் தணிப்புக்கான 'கடலோர வெள்ள எச்சரிக்கை அமைப்பு (Coastal Flood Warning System App (**CFLOWS**) – சென்னை)' ஆகியவற்றை குடியரசு துணைத்தலைவர் M வெங்கையா சென்னையில் வெளியிட்டார்.

✓ இந்த வரைபடம் மற்றும் CFLOWS–சென்னை ஆகிய இரண்டும் தயார்நிலை மற்றும் தடுப்பு உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கிய அமைப்புகளாக கருதப்படுகின்றன. நகர்ப்புறத்தில் ஏற்படும் வெள்ளத்தை திறம்பட சமாளிப்பதற்கான இத்தகைய முயற்சிகள் மும்பை, மகாராஷ்டிரா உள்ளிட்ட பிற இந்திய நகரங்களிலும் விரைவில் செயல்பாட்டுக்கு வரும்.

**8.இலக்கியத்திற்கு வழங்கப்படும் JCB பரிசை நடப்பாண்டில் வென்ற இந்திய எழுத்தாளர் யார்?**




**A) மாதுரி விஜய் ☑**

B) பிரதீப் கிரிஷென்

C) அஞ்சும் ஹாசன்

D) K R மீரா

✓ 27 வயதான மாதுரி விஜய், 'The Far Field' என்ற தனது முதல் புதினத்துக்காக இலக்கியத்திற்கு வழங்கப்படும் JCB பரிசை நடப்பாண்டில் (2019) வென்றுள்ளார். ஹென்பீல்ட் பரிசு மற்றும் புஷ்கர்ட் பரிசையும் மாதுரி பெற்றுள்ளார்.

✓ இது, 2018ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, ஆண்டுதோறும் வழங்கப்படும் ஓர் இந்திய இலக்கியவிருதாகும். ஆங்கிலத்தில் பணியாற்றும் இந்திய எழுத்தாளர் ஒருவரின் புகழ்பெற்ற புனைகதைக்கோ அல்லது இந்திய எழுத்தாளர் ஒருவரின் மொழிபெயர்க்கப்பட்ட புனைகதைக்கோ இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. ₹25 லட்சம் ($38400) ரொக்கப்பரிசைக்கொண்டுள்ள இவ்விருதை, JCB இலக்கிய அறக்கட்டளையை நிறுவிய ஆங்கில கட்டுமான எந்திரங்கள் உற்பத்திக் குழுவான JCB வழங்கிவருகிறது.

**9. 23 வயதிற்குட்பட்டோர் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பின் எந்தப் பிரிவில், பூஜா கெலாட் இந்தியாவின் 2ஆவது வெள்ளியை வென்றார்?**

A) 57 கி.கி

**B) 53 கி.கி ☑**

C) 63 கி.கி

D) 65 கி.கி




✓ 23 வயதுக்குட்பட்டோர் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியாவின் பூஜா கெலாட் வெள்ளிப் பதக்கம் வென்றார். பல்கேரியாவின் புடாபெஸ்ட் நகரத்தில் நடந்துவரும் இந்தப் போட்டியில் மகளிர் 53 கி.கி எடைப்பிரிவு இறுதிச்சுற்றில், இந்தியாவின் பூஜா கெலாட், முன்னாள் உலக சாம்பியன் ஜப்பானின் ஹருனா ஒகுனோவிடம் 0–2 என்ற புள்ளிக்கணக்கில் தோல்வியுற்று வெள்ளி வென்றார். ஏற்கனவே ஆடவர் 61 கி.கி பிரிவில் இந்தியாவின் இரவீந்தர் வெள்ளிப்பதக்கம் வென்றிருந்தார்.

**10. 'ஒற்றை ஆவணப்பட' பிரிவில், எந்த இந்திய கால்பந்து லீகின் ஆவணப்படத்துக்கு நடப்பாண்டுக்கான 'BAFTA ஸ்காட்லாந்து' விருது கிடைத்துள்ளது?**

A) சர்ச்சில் பிரதர்ஸ்

B) லோன்ஸ்டார் காஷ்மீர்

**C) ரியல் காஷ்மீர் ☑**

D) மத்திய பாரத்

✓ ரியல் காஷ்மீர் FCஇன் BBC ஆவணப்படமானது பிரிட்டிஷ் அகாடமி திரைப்பட மற்றும் தொலைக்காட்சி கலைகள் (BAFTA) ஸ்காட்லாந்தில் 'ஒற்றை ஆவணப்படம்' பிரிவில் விருது வென்றுள்ளது. காஷ்மீரைச் சேர்ந்த இந்தக் கால்பந்து கிளப், 2017–18 சீசனில் ஐ–லீக் இரண்டாம் பிரிவின் சாம்பியனானது. BBCஇன் இந்த ஆவணப்படம், BAFTA ஸ்காட்லாந்தில், 'Director–Factual' மற்றும் 'Single Documentary' என இரண்டு பிரிவுகளின்கீழ் பரிந்துரைக்கப்பட்டது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ தமிழ்நாட்டில் கால்நடைகளுக்கான அவசர ஊர்தி சேவையை விரிவுபடுத்தும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் பழனிசாமி தொடங்கிவைத்தார். இச்சேவையைப்பெற 1962 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவேண்டும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய பழங்குடியினர் விழா நடைபெறவுள்ள நகரம் எது?**



A) கான்பூர்

B) பாட்னா

C) மும்பை

**D)** புது தில்லி ☑

- ✓ 15 நாட்கள் நடைபெறும் தேசிய பழங்குடியினர் திருவிழாவானது (அல்லது ஆதி மகோத்ஸவம்) புது தில்லியில் நவ.16 அன்று தொடங்கவுள்ளது. பழங்குடியினரின் கலாசாரம், கைவினைப்பொருட்கள், அவர்தம் உணவு மற்றும் வணிகத்தின் கொண்டாட்டந்தான் இந்த விழாவின் கருப்பொருளாகும்.
- ✓ இவ்விழாவின்போது, இருநூற்றுக்கும் மேற்பட்ட சிற்றங்காடிகள் மூலம் பழங்குடியினரின் கைவினைப் பொருட்கள், ஓவியங்கள், உடைகள், நகைகள் மற்றும் பலவை கண்காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படும். இந்த நிகழ்வில், இருபத்தேழு மாநிலங்களைச்சேர்ந்த சுமார் ஆயிரம் பழங்குடியின கைவினைஞர்கள் பங்கேற்பார்கள்.

**2. ஐந்தாவது இந்திய சர்வதேச அறிவியல் விழாவில் கருப்பொருள் என்ன?**




A) Science for Transformation

B) Science for New India

**C)** RISEN India ☑

D) Boost New India

- ✓ ஐந்தாவது இந்தியா சர்வதேச அறிவியல் விழாவானது மேற்கு வங்க மாநிலத்தின் கொல்கத்தாவில் நவ.5–8 வரை நடைபெறுகிறது. 4 நாள் நடைபெறும் இவ்விழாவை பிரதமர் மோடி காணொளிக்காட்சி மூலம் தொடங்கிவைத்தார். இதனை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் அமைச்சகமும் விஞ்ஞான பாரதியும் (VIBHA) இணைந்து ஏற்பாடுசெய்துள்ளன. நாடு முழுவதுமிருந்து 12,000க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ மக்களிடையே அறிவியல் உணர்வைத் தூண்டுவதும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் இந்தியாவின் பங்களிப்பை எடுத்துக்காட்டுவதும் இவற்றின் பயன்கள் மக்களுக்கு மாற்றப்படுவதை ஊக்குவிப்பதும் இந்த விழாவின் முதன்மை நோக்கமாகும். அனைத்தையும் உள்ளடக்கிய அறிவியல் தொழில்நுட்பத்தின் முன்னேற்ற உத்தியைக் கட்டமைப்பதும் இதன் நோக்கமாகும். ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு, அறிவியல் ஆகியவை தேசத்தை வலுவாக்குகிறது என்பதைக் குறிக்கும் வகையில், 'RISEN India' என்பது நடப்பாண்டு (2019) நடைபெறும் இவ்விழாவின் கருப்பொருளாக உள்ளது.

**3. 15ஆவது SACEP நிர்வாகக்குழு கூட்டத்தில் இந்திய தூதுக்குழுவை வழிநடத்துவது யார்?**



A) நரேந்திர மோடி

B) ஓம் பிர்லா

**C) பிரகாஷ் ஜவடேகர் ☑**

D) இராம்நாத் கோவிந்த்

- ✓ நவம்பர் 6 அன்று டாக்காவில் நடைபெறும் தெற்காசியா கூட்டுறவு சுற்றுச்சூழல் திட்டத்தின் (SACEP) 15ஆவது கூட்டத்தில் சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்றம் மற்றும் தகவல் & ஒலிபரப்பு அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் கலந்துகொள்ளவுள்ளார்.

- ✓ SACEP என்பது 1982ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அரசுகளுக்கிடையேயான ஓர் அமைப்பு ஆகும். அதன் உறுப்புநாடுகளான ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியவை தெற்காசிய பிராந்தியத்தில் சுற்றுச்சூழலின் பாதுகாப்பு, மேலாண்மை மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதையும் ஆதரிப்பதையும் நோக்கமாகக்கொண்டுள்ளன. SACEP நிர்வாகக்குழுவின் 14ஆவது கூட்டம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் கொழும்புவில் நடைபெற்றது.

**4. பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு (RCEP) ஒப்பந்தத்தில் சேரவேண்டாம் என முடிவுசெய்துள்ள நாடு எது?**




**A) இந்தியா ☑**

B) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA)

C) நியூசிலாந்து

D) ஐக்கிய பேரரசு

- ✓ நவ.4 அன்று தேசிய அளவிலான 16ஆவது பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பில் (RCEP) இருந்து இந்தியா விலகிச்செல்ல முடிவுசெய்தது. நாட்டில் சீனப்பொருட்களின் இறக்குமதி அதிகளவில் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தின் பேரில், இக்கூட்டமைப்பில் சேரவேண்டாம் என இந்திய அரசு முடிவுசெய்துள்ளது.

- ✓ RCEPஇன்கீழ் சீனா, ஆஸ்திரேலியா & நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 74% பொருட்கள் மற்றும் ஜப்பான், தென்கொரியா மற்றும் ASEAN ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 90% பொருட்களுக்கான வரிகளை நீக்குவதற்கு இந்தியா கட்டாயப்படுத்தப்பட்டிருக்கும். இந்தியா ஏற்கனவே சீனாவுடன் $57 பில்லியன் டாலர் வர்த்தக பற்றாக்குறையை கொண்டுள்ளது. இது, கொள்கை வகுப்பாளர்களுக்கு சிக்கலாக உள்ளது.


**5.இருபத்தேழாவது எழுத்தச்சன் புரஸ்காரம் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?**

A) M முகுந்தன்

**B) ஆனந்த் ☑**

C) K ஜெயக்குமார்

D) இராணி ஜார்ஜ்



✓ பிரபல எழுத்தாளரான ஆனந்த், மலையாள மொழி மற்றும் இலக்கியத்துக்கான அவரது ஒட்டுமொத்த பங்களிப்புகளுக்காக 27ஆவது எழுத்தச்சன் புரஸ்காரத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது கேரள அரசால் வழங்கப்படும் மிகவுயர்ந்த இலக்கிய கௌரவமாகவும். 'மலையாள மொழியின் தந்தை' என அழைக்கப்படும் எழுத்தச்சன் பெயரால் இந்த விருது வழங்கப்படுகிறது. ₹5 இலட்சம் ரொக்கப்பரிசும் ஒரு பாராட்டுப்பத்திரத்தையும் உள்ளடக்கியது இவ்விருது.

**6.ஆஸ்திரேலிய அரசாங்கத்தின், 'நடப்பாண்டுக்கான ஆரம்பகால வாழ்க்கை ஆராய்ச்சியாளர்' விருதை வென்ற இந்திய வம்சாவளியைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர் யார்?**

A) K S முகர்ஜி

B) நிஷாந்த் பாட்டீல்

C) M K சனு

**D) நீரஜ் சர்மா ☑**



✓ குறைந்த அளவில் சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்தும் லித்தியம் அயன் மின்கலங்கள், சோடியம் அயன் மின்கலங்கள் போன்ற அடுத்த தலைமுறை மின்கலங்களை உருவாக்கியதற்காக இந்திய வம்சாவளி ஆராய்ச்சியாளரான நீரஜ் சர்மாவுக்கு, ஆஸ்திரேலிய அரசாங்கம், நடப்பாண்டுக்கான (2019) 'ஆரம்பகால வாழ்க்கை ஆராய்ச்சியாளர்' என்ற விருதினை வழங்கியுள்ளது. நீரஜ் ஷர்மா, தற்போது, ஆஸ்திரேலியாவில் உள்ள சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் (UNSW) வேதியியல் பிரிவு பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

**7.மாற்றுத்திறனாளிகளுக்காக 'Arise – A Standing Wheelchair – நின்றபடியே செல்லக்கூடிய சக்கர நாற்காலி'யை வடிவமைத்துள்ள ஐஐடி எது?**

**A) ஐஐடி சென்னை ☑**

B) ஐஐடி பாம்பே

C) ஐஐடி இந்தூர்

D) ஐஐடி கான்பூர்



✓ சென்னை IIT நிறுவனமானது பீனிக்ஸ் மருத்துவ சாதனங்கள் தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து, இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 'நின்றபடியே செல்லக்கூடிய சக்கர நாற்காலி'யை வெளியிட்டுள்ளது. அமர்ந்த நிலையிலிருந்து, நின்றநிலையில் பயணம் செய்யக்கூடிய

சக்கர நாற்காலி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள், தாமாகவும், பிறரது கட்டுப்பாட்டிலும் செல்வதற்கு இந்தச் சக்கரநாற்காலி வகைசெய்யும்.

✓ 'Arise' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நவீன சக்கரநாற்காலி, சென்னை IITஇன் இயந்திர பொறியியல் துறை பேராசிரியர் சுஜாதா ஸ்ரீநிவாசன் தலைமையிலான குழுவினரால், IITஇல் உள்ள மறுவாழ்வு ஆராய்ச்சி மற்றும் கருவிகள் தயாரிப்புக்கான TTK மையத்தால் வடிவமைத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

**8. நடப்பாண்டு தியோதர் கோப்பையை வென்ற அணி எது?**

**A) இந்தியா B ☑**

B) இந்தியா A

C) இந்தியா C

D) இந்தியா E



✓ ஜார்கண்ட் மாநிலம் இராஞ்சியில் அமைந்துள்ள JSCA சர்வதேச அரங்க வளாகத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில், பார்த்திவ் படேல் தலைமையிலான இந்தியா B அணி, இந்தியா C அணியை 51 இரன்கள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டு 47ஆவது தியோதர் கோப்பையை வென்றது.

**9. இந்திய நிலத்துறைமுக ஆணையத்தின் (LPAI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) விராட் சிங்

B) நிதீஷ் ராணா

**C) ஆதித்யா மிஸ்ரா ☑**

D) இஷான் பொரல்



✓ இந்திய நிலத்துறைமுக ஆணையத்தின் (Land Ports Authority of India) தலைவராக ஆதித்யா மிஸ்ரா IPS (1989: உத்தரபிரதேசம்) நியமிக்கப்பட்டுள்ளார். தேடல் – தேர்வுக்குழுமத்தின் பரிந்துரைகளின் பேரில் அவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர், பொறுப்பேற்ற நாளிலிருந்து அடுத்துவரும் ஐந்து ஆண்டு காலத்திற்கு LPAIஇன் தலைவராக பணியாற்றுவார்.

✓ **LPAI** என்பது 2012 மார்ச் 1 அன்று நிலத்துறைமுக ஆணையச் சட்டம் 2010இன்கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டபூர்வமான அமைப்பாகும். இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. இது, இந்தியாவின் சர்வதேச எல்லைகளில் அமைந்துள்ள முனையங்களில் பயணிகளின் போக்கை கண்காணிக்கிறது. மேலும், பொருட்களின் போக்குவரவை பராமரிக்கிறது மற்றும் நிர்வகிக்கிறது. இது இந்தியாவின் எல்லைகள் முழுவதும் அமைந்துள்ள பல ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளையும் நிர்வகித்து வருகிறது.

**10.இந்திய சுங்கத்துறையின் கண்காணிப்புப் பணிகளை எளிமையாக்குவதற்காக சமீபத்தில் தொடங்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முயற்சி எது?**

A) TECHDASH

B) CUSTOMDASH

**C)** ICEDASH ☑

D) PORTDASH




✓ இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான சுங்கத்துறையின் அனுமதியை மேம்படுத்துதல், பயண உடைமைகள் மற்றும் நாணய அறிக்கைகளை மின்னணு முறையில் தாக்கல் செய்வதன் மூலம் சர்வதேச பயணிகளுக்கு வசதி வழங்குதல் ஆகியவற்றுக்காக முறையே, 'ICEDASH' மற்றும் 'ATITHI' என்ற இரண்டு புதிய தகவல் தொழில்நுட்ப முயற்சிகளை மத்திய நிதி மற்றும் பெருநிறுவனங்கள் விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டுள்ளார்.

---

## நடப்பு நிகழ்வுகள்


**1. ஆறாவது G20 நாடாளுமன்ற அவைத்தலைவர்கள் உச்சிமாநாட்டில் பங்கேற்ற இந்திய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவை வழிநடத்தியது யார்?**

A) S ஜெய்சங்கர்

**B) ஓம் பிர்லா ☑**

C) பியூஷ் கோயல்

D) நிதின் கட்கரி



✓ மக்களவை அவைத்தலைவர் ஓம் பிர்லா தலைமையிலான இந்திய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழு, ஜப்பானின் டோக்கியோவில் நவ.3–5 தேதிகளில் நடந்த G20 நாடுகளின் ஆறாவது நாடாளுமன்ற அவைத்தலைவர் உச்சிமாநாட்டில் பங்கேற்றது. இந்த உச்சிமாநாட்டில் G20 நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்றங்களின் தலைமை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

✓ இந்த நாடாளுமன்ற உச்சிமாநாடு, பொதுவாக 'P20' என்று அழைக்கப்படுகிறது. இது, ஜெனீவாவை தலைமையாகக்கொண்டு இயங்கும் சர்வதேச நாடாளுமன்றங்களுக்கிடையேயான அமைப்பு (IPU) & ஜப்பானின் தேசிய டயட்டின் கவுன்சிலர்கள் மன்றம் ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டுள்ளது. இந்த உச்சிமாநாட்டில் வர்த்தகம் (Promotion of Free, Open and Fair Trade and Investment), தொழில்நுட்பம் (Utilization of Innovative Technology towards a human–centred Future Society) மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Efforts towards Resolution of Global Challenges and Achievement SDGs') தொடர்பான தனித்தனி கருப்பொருள்களில் அமர்வுகள் இடம்பெற்றிருந்தன

**2. எந்த நகரத்தின் மாணவர்கள், வானியற்பியல் வகுப்புக்காக மிகப்பெரிய அளவில் ஒன்றுகூடி கின்னஸ் உலக சாதனையை நிகழ்த்தியுள்ளனர்?**

**A) கொல்கத்தா ☑**

B) மைசூர்

C) புனே

D) புது தில்லி

✓ நடப்பாண்டு (2019) இந்திய சர்வதேச அறிவியல் விழாவின் முதல்நாளன்று ஆயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்றெட்டுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றதன் மூலம் கொல்கத்தாவின் அறிவியல் நகரத்தில் மிகப்பெரிய வானியற்பியல் பாடம் (45 நிமிடங்கள்) மற்றும் நிறமாலைகாட்டி திரட்டல் ஆகியவற்றுக்கான கின்னஸ் உலக சாதனை வெற்றிகரமாக அடையப்பட்டது.

**3. DRDO இக்னைட்டர் வளாகமானது எந்த DRDO ஆய்வகத்தில் அமைக்கப்பட்டுள்ளது?**

A) Centre for Artificial Intelligence & Robotics (CAIR)

B) Defence Research & Development Establishment (DRDE)

C) Armaments Research & Development Establishment (ARDE)

**D) High Energy Materials Research Laboratory (HEMRL) ☑**

✓ மத்திய பாதுகாப்பு இணையமைச்சர் ஸ்ரீபத் நாயக், புனேவில் உள்ள உயராற்றல் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வகத்தில் (HEMRL) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) 'Igniter Complex'ஐ திறந்துவைத்தார். HEMRL என்பது DRDOஇன் ஒரு முதன்மையான ஆய்வகமாகும். இது, ஏவுகணை மற்றும் துப்பாக்கி இயக்கிகள், பைரோடெக்னிக் சாதனங்கள், பெருவெடிப்பு அமைப்புகள் மற்றும் உயர் ஆற்றல் மூலக்கூறுகளின் தொகுப்பு ஆகியவற்றை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது.

**4. 5ஆவது தரிசு நிலங்கள் வரைபடத்தை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**A) ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**



B) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

C) ஜல் சக்தி அமைச்சகம்

D) சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம்

✓ தரிசு நிலங்கள் வரைபடம்–2019இன் ஐந்தாவது பதிப்பை வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் வெளியிட்டுள்ளார். நிலவளங்கள் துறையும் தேசிய தொலையுணர்திறன் மையமும் இணைந்து வெளியிட்டுள்ள இந்த வரைபடம், தரிசு நிலம் குறித்த வலுவான புவியியல் தகவல்களை வழங்குகிறது. பல்வேறு நில மேம்பாட்டு திட்டங்கள் மூலம் தரிசு நிலங்களை உற்பத்தி பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு இது பேருதவியாக இருக்கும்.

**5. நடப்பாண்டின் (2019) மிஸ் ஆசியா குளோபல் பட்டத்தை வென்ற சாரா டாம்ஜனோவிக், எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

A) பிரான்ஸ்




B) வியட்நாம்

**C) செர்பியா ☑**

D) ஸ்பெயின்

✓ கேரளாவின் கொச்சியில் உள்ள கோகுலம் மாநாட்டு மையத்தில், 'மிஸ் ஆசியா குளோபல் பட்டம் – 2019'இன் ஐந்தாவது பதிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில், செர்பியாவைச்சேர்ந்த சாரா டாம்ஜனோவிக் 'மிஸ் ஆசியா குளோபல்–2019' என பட்டம் சூட்டப்பட்டார். வியட்நாமைச் சேர்ந்த நுயென் தி யென் டிராங்கிற்கு 'மிஸ் ஆசியா–2019' பட்டம் வழங்கப்பட்டது.

- ✓ 'மிஸ் பியூட்டிஃபுல் ஃபேஸ்' பட்டத்தின் உப பட்டத்தை இந்தியாவைச் சேர்ந்த சமிக்ஷா சிங் வென்றார். அடுத்த 'மிஸ் ஆசியா குளோபல் பட்டம்–2020' போட்டியானது மலேசியாவில் நடைபெறும்.

**6. திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகமானது எந்த நிறுவனத்துடன் இணைந்து திறன் மேம்பாட்டுத் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?**

A) மைக்ரோசாப்ட்

B) இன்போசிஸ்

C) பேஸ்புக்

**D) ஐ பி எம் (IBM) ☑**

- ✓ திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகத்தின் உதவியுடன் பயிற்சி இயக்குநரகமானது IBM நிறுவனத்துடன் இணைந்து திறன் மேம்பாட்டுத் தளத்தை தொடங்குவதாக அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின் ஒருபகுதியாக, IBM நிறுவனம் இணைந்து உருவாக்கி வடிவமைத்த தகவல் தொழிநுட்பம், நெட்வொர்க்கிங் மற்றும் மேகக்கணிமை ஆகியவற்றில் ஈராண்டுகால மேம்பட்ட பட்டயப்படிப்பை, தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தேசிய திறன் பயிற்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.
- ✓ இத்தளம், மாணவர்களுக்கு அறிவாற்றல் திறன்கள் மற்றும் ஆளுமை பற்றிய தனிப்பட்ட மதிப்பீட்டை, 'MyInnerGenius' ஊடாக மாணவர்களுக்கு வழங்கும். பின்னர் அவர்கள் டிஜிட்டல் தொழினுட்பங்களைப் பற்றிய அடிப்படை அறிவைக் கற்றுக்கொள்வார்கள், அத்துடன் விண்ணப்பம் எழுதுதல், சிக்கலுக்குத் தீர்வு காணல் மற்றும் தகவல் தொடர்பு போன்ற தொழில்முறை திறன்களையும் கற்றுக்கொள்வார்கள்.

**7. காலநிலைக்கான மண் & நீர்வள மேலாண்மை தொடர்பான சர்வதேச மாநாடு தொடங்கிய நகரம் எது?**

**A) புது தில்லி ☑**

B) பாரிஸ்

C) கொழும்பு

D) காத்மாண்டு



- ✓ காலநிலை திறன்மிக்க வேளாண்மை மற்றும் சர்வதேச உணவு மற்றும் வாழ்வாதார பாதுகாப்புக்கான மண் மற்றும் நீர்வள மேலாண்மை தொடர்பான சர்வதேச மாநாடு புது தில்லியில் உள்ள தேசிய வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் தொடங்கியது.
- ✓ உலக மண் மற்றும் நீர் பாதுகாப்பு சங்கம் (WASWAC), சீனா மற்றும் அமெரிக்காவின் சர்வதேச மண் பாதுகாப்பு அமைப்பு (ISCO) ஆகியவற்றுடன் இணைந்து இந்திய மண் பாதுகாப்பு சங்கம் இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. இம்மாநாட்டில் சீனா, ஜப்பான், ஸ்பெயின் மற்றும் எகிப்து போன்ற 21 நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 400 பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

**8. CARAT–2019 என்பது பின்வரும் எந்த இரு நாடுகளுக்கிடையேயான மிகப்பெரிய கடற்படை பயிற்சியாகும்?**

A) பிரான்ஸ் மற்றும் இந்தியா

B) இந்தியா மற்றும் இலங்கை

**C) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) மற்றும் வங்கதேசம் ☑**

D) இலங்கை மற்றும் வங்கதேசம்



✓ 'Cooperation Afloat Readiness and Training (CARAT) – 2019' என்ற பெயரில் அமெரிக்கா–வங்கதேசம் இடையிலான மிகப்பெரிய கடற்படை பயிற்சியின் இரண்டாம் கட்டம் சட்டோகிராமில் தொடங்கியது. அது, நவம்பர் 4–7 வரை பல்வேறு பயிற்சிகளுடன் நடத்தப்படும். இருநாடுகளின் கடற்படையினரின் செயல்பாட்டு நடவடிக்கைகள் குறித்து நன்கு புரிந்துகொள்ளவும், பல்வேறு தத்துவார்த்த மற்றும் நடைமுறை பயிற்சிகள் மூலம் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பற்றி அறிந்துகொள்ளவும் இந்தப்பயிற்சி ஒரு நல்வாய்ப்பை வழங்குகிறது.

**9. எந்தத் தேதியில், உலக சுனாமி விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிறது?**

A) நவம்பர் 4

B) நவம்பர் 6

**C) நவம்பர் 5 ☑**

D) நவம்பர் 7




✓ ஆழிப்பேரலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவ.5 அன்று உலக சுனாமி விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. எப்போதாவது ஒருமுறை அதிசயமாக நேரக்கூடிய ஓர் இயற்கை சீற்றந்தான் ஆழிப்பேரலை. ஆனால் இது மிகவும் பயங்கரமானது. கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்ட 58 ஆழிப்பேரலைகளால் மட்டும் சுமார் 2,60,000 பேர் மாண்டுள்ளார்கள்.

**10. டனகில் மந்தநிலையுடன் (Danakil Depression) தொடர்புடைய ஆப்பிரிக்க நாடு எது?**

A) மொராக்கோ

**B) எத்தியோப்பியா ☑**

C) அல்ஜீரியா

D) கென்யா



✓ எத்தியோப்பியாவில் உள்ள டனகில் பகுதியானது உயிரினங்கள் இயற்கையாக வாழ்வதற்கேற்ற சூழலமைப்பைக் கொண்டிருக்கவில்லை என அண்மைய ஆய்வொன்று தெரிவித்துள்ளது. செல்கள் உடைந்துபோகும் அளவுக்கு மெக்னீசியத்தின் தாக்கம் நிறைந்த உப்புநீரும், மிகக்குறைந்த pH மதிப்பும் அதீத உப்புத்தன்மைகொண்ட சூழலுமே அச்சூழ்நிலைக்குக் காரணமாகக் கூறப்பட்டுள்ளது.

- ✓ வடகிழக்கு எத்தியோப்பியாவில் பெரும்பிளவுப் பள்ளத்தாக்கின் வடக்கு முனையில் அமைந்துள்ள இது, உயிருள்ள எரிமலைகளால் செங்கடலிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 100 மீட்டருக்கும் கீழே அமைந்துள்ள உலகின் சில பகுதிகளில் இதுவும் ஒன்றாகும். அங்குள்ள நீர்நிலைகள் அனைத்தும் ஆவியாதலின் காரணமாக இந்தச்சமவெளி உருவாகிறது. 10 இலட்சம் டன்களுக்கும் அதிகமான உப்பு இப்பகுதியில் படர்ந்து மூடப்பட்டுள்ளது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ திருநெல்வேலி மாவட்ட நிர்வாகத்துக்கும் மாவட்ட தேசிய தகவலியல் தொழில்நுட்பத்துறைக்கும், 'Digital Transformation Award–2019' என்னும் விருது 'Goverance–Now' என்ற தேசிய குழு மூலம் புது தில்லியில் வழங்கப்பட்டது. இவ்விருது அரசு துறையில் மின்னணு மாற்றம் என்ற அடிப்படையில், கடந்த 2019 நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் மாவட்டத்தில் உள்ள 2979 வாக்குச்சாவடி மையங்களிலும் புவிசார் அமைப்பு மூலமாக கண்காணித்து சிறப்பான முறையில் தேர்தலை நடத்தியமைக்காக மாவட்ட அளவிலான மின்னணு மாற்றத்துக்காக வழங்கப்பட்டுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. 'அலார் டோல் – Allar Dol' என்ற இஸ்லாமிய அமைப்பை தடைசெய்துள்ள நாடு எது?**

A) இந்தியா

**B) வங்கதேசம் ☑**

C) பாகிஸ்தான்

D) இலங்கை



✓ பொது அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதால், 'அலார் டோல்' என்ற இஸ்லாமிய அமைப்பை வங்கதேச அரசு தடைசெய்துள்ளது. வங்கதேசத்தில் தீவிரவாதத்திற்காக தடைசெய்யப்பட்ட 9ஆவது இஸ்லாமிய குழு இதுவாகும். ஆயுதப்போராட்டத்தின் மூலம் கலீபகத்தை நிறுவும் நோக்கத்துடன் 1995இல் 'அலார் டால்' உருவாக்கப்பட்டது.

✓ 2004ஆம் ஆண்டில், அவ்வமைப்பு, தடைசெய்யப்பட்ட போராட்டக் குழுவான ஜமாஅதுல் முஜாஹிதீன் வங்கதேசத்துடன் (JMB) இணைந்தது. 2005ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டுவெடிப்பைத்தொடர்ந்து JMBஇன் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர், அதன் தலைவர்கள் சிலர் அலார் டோலை மீண்டும் கட்டமைத்தனர்.


**2. "GV–971" என்னும் ஆல்சைமர் நோய்க்கான (Alzheimer's disease) உலகின் முதல் மருந்தை அண்மையில் அங்கீகரித்த நாடு எது?**

**A) சீனா ☑**

B) இந்தியா

C) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

D) பிரான்ஸ்




✓ அல்சைமர் நோய்க்கான உலகின் முதல் பல்–இலக்கு மற்றும் கார்போஹைட்ரேட் அடிப்படையிலான "GV–971" என்னும் மருந்தானது பழுப்புநிற ஆல்காவிலிருந்து எடுக்கப்படுகிறது. வீட்டில் வளர்க்கப்படும் கடற்பாசி சார்ந்த இந்த மருந்துக்கு அண்மையில் சீனா ஒப்புதல் அளித்துள்ளது.

✓ உலகெங்கிலும் உள்ள மருந்து நிறுவனங்களால் அல்சைமர் நோய்க்காக உருவாக்கப்பட்ட 320க்கும் மேற்பட்ட மருந்துகளில், மருத்துவப் பரிசோதனையில் இந்த ஒரு மருந்து மட்டுந்தான் வெற்றிபெற்றது. வாய்வழியாக எடுக்கப்படும் இந்த மருந்தின் மூலம், அல்சமைர் நோயின் லேசான மற்றும் மிதமான வடிவங்களுக்கு சிகிச்சையளிக்க முடியும். மேலும், அறிவாற்றலையும் மேம்படுத்த இயலும். அல்சைமர் நோய் என்பது மீளமுடியாத ஒரு மூளைக்கோளாறாகும். இது நினைவுகள், சிந்தனைத்திறன் மற்றும் எளிய பணிகளைச் செய்வதற்கான திறனை மெதுவாக அழிக்கிறது.

**3.கார்பன் பிரீப்பில் வெளியிடப்பட்ட ஒரு பகுப்பாய்வின்படி, இந்தியாவின் $CO_2$ உமிழ்வானது 2019ஆம் ஆண்டில் எத்தனை சதவீதமாகக் குறையும்?**

A) 3%

B) 4%

C) 1%

**D) 2% ☑**



- ✓ கார்பன் பிரீப்பில் (Carbon Brief) வெளியிடப்பட்ட ஒரு பகுப்பாய்வின்படி, இந்தியாவின் கரியமிலவாயு ($CO_2$) உமிழ்வு வளர்ச்சியானது நடப்பாண்டில் (2019) இரண்டு சதவீதமாகக் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தியில் மந்தமான வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அடிப்படையிலான மின்னுற்பத்தியில் மிகையான வளர்ச்சியின் காரணமாக 2001ஆம் ஆண்டிலிருந்து எந்தவொரு ஆண்டிலும் காணப்படும் வருடாந்திர அதிகரிப்பைவிட 2019இல் உமிழ்வு குறைவாகவே உள்ளது.
- ✓ எண்ணெய் தேவையின் வளர்ச்சி 2019ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 2.6 சதவீதம் என குறைந்துள்ளது. இது 2018ஆம் ஆண்டில் 4.6 சதவீதம் எனவும், கடந்த 10 ஆண்டுகளில் சராசரியாக 5 சதவீதம் எனவும் இருந்தது. 'Carbon Brief' என்பது உமிழ்வு & $CO_2$ ஆகியவற்றின் போக்குகளைக் கண்காணிக்கும் ஒரு வலைத்தளமாகும்.

**4.மாஸ்கோவில் நடந்த IRIGC – M & MTC கூட்டத்திற்கு இணைந்து தலைமைதாங்கிய இந்திய தலைவர் யார்?**



A) பியூஷ் கோயல்

B) வெங்கையா

**C) இராஜ்நாத் சிங் ☑**

D) நரேந்திர மோடி

- ✓ மாஸ்கோவில் நடந்த 19ஆவது இராணுவம் மற்றும் இராணுவ–தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான இந்தியா–இரஷ்ய அரசுகளுக்கு இடையேயான ஆணையத்தின் (IRIGC – M & MTC) கூட்டத்திற்கு மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் மற்றும் இரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் செர்ஜி ஷோயுக் ஆகியோர் இணைந்து தலைமைதாங்கினர்.
- ✓ முக்கிய பாதுகாப்பு தளங்களின் விற்பனைக்குப் பின்னான ஆதரவுக்காக குறிப்பிட்ட பணிக்குழுக்களை உருவாக்க இருதரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். உத்தரபிரதேச தலைநகரம் இலக்னோவில் பிப்.5 முதல் 8 வரை நடைபெறவுள்ள DEFEXPO–2020இல் இரஷ்யாவின் பங்கேற்பை இரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார். 'இந்தியாவில் தயாரிப்போம்' என்னும் திட்டத்தின்கீழ் இந்தியாவின் பாதுகாப்பு திறன்களை அதிகரிப்பதில் இரஷ்யா தனது முழு ஆதரவையும் அளித்து வருகிறது.

**5. "மோகன் இராகேஷ் நாட்டியா எவாம் சம்மன் சமரோ" என்ற நாடக விழாவை ஏற்பாடு செய்யவுள்ள மாநில / யூனியன் பிரதேச அரசு எது?**



A) மத்தியப்பிரதேசம்

B) உத்தரப்பிரதேசம்

C) பஞ்சாப்

**D) தில்லி ☑**

✓ புகழ்பெற்ற நாடக ஆசிரியர் மோகன் இராகேசுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், "மோகன் இராகேஷ் நாட்டிய எவாம் சம்மன் சமரோ" என்ற 4 நாள் திருவிழாவை தில்லி அரசின் கலை மற்றும் கலாசார பிரிவான, "சாகித்திய கலா பரிஷத்" நவ.11 முதல் கமணி அரங்கில் நடத்துகிறது. நாடகத்துறையில் வரவிருக்கும் திறமையாளர்களுக்கு ஒரு தளத்தை வழங்குவதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

✓ 1950களில் 'நய் கஹானி' (புதிய சிறுகதை) என்ற ஹிந்தி இலக்கிய இயக்கத்தின் பின்னணியில் இருந்தவர்களுள் ஒருவராக இராகேஷ் அறியப்படுகிறார். மேலும், 1958ஆம் ஆண்டில் "ஆஷாத் கா ஏக் தின்" என்ற தலைப்பில் முதல் நவீன ஹிந்தி நாடகத்தையும் அவர் எழுதினார்.

**6. மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகமானது எந்த நகரத்தில், முதலாவது BIMSTEC துறைமுகங்கள் மாநாட்டை நடத்துகிறது?**




A) கொச்சி

**B) விசாகப்பட்டினம் ☑**

C) மும்பை

D) கொல்கத்தா

✓ வங்கக்கடல் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான அமைப்பைச் (BIMSTEC) சேர்ந்த நாடுகளின் முதலாவது துறைமுகங்கள் மாநாடானது நவம்பர் 7–8 ஆகிய தேதிகளில் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடைபெறுகிறது. இம்மாநாட்டை மத்திய கப்பல் துறை இணையமைச்சர் மன்சுக் மாண்டவியா தொடங்கிவைத்தார்.

✓ BIMSTEC நாடுகளின் இந்த முதலாவது துறைமுக மாநாடு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் மற்றும் கப்பல் போக்குவரத்துகளை அதிகரிப்பதன் மூலம், பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் என எதிர்பார்க்கப்படுகிறது. தெற்காசியா மற்றும் தென்கிழக்காசியாவில் உள்ள வங்கதேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் BIMSTEC அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன.

**7. இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையில் "Tiger TRIUMPH" என்ற முதலாவது முப்படை சேவைகள் பயிற்சி நடத்தப்படுகிறது?**



**A) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**

B) பிரான்ஸ்

C) ஜெர்மனி

D) ஸ்பெயின்

✓ இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து விசாகப்பட்டினம் மற்றும் காக்கிநாடாவில் "Tiger TRIUMPH" என்ற பெயரில் தங்களின் முதல் முப்படை இராணுவப் பயிற்சியை நடத்தவுள்ளன. ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியாளர்களின் (Integrated Defence Staff) தலைமையகத்தின் தலைமையில் இந்தப் பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது மனிதநேய அடிப்படையிலான நிவாரண நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும்.

**8. நடப்பாண்டுக்கான (2019) TATA Literature Live! வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர் யார்?**



**A) சாந்தா கோகலே ☑**

B) அருண் கோலகர்

C) K சச்சிதானந்தன்

D) பாவ் பஞ்ச்பாய்

✓ நடப்பாண்டுக்கான (2019) TATA Literature Live! வாழ்நாள் சாதனையாளர் விருதானது எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளரும் திரை–விமர்சகருமான சாந்தா கோகலேவுக்கு வழங்கப்பட்டுள்ளது. மகாராட்டிர மாநிலம் தகானு நகரத்தில் 1939இல் பிறந்த அவர், அண்மையில் தனது நினைவுக்குறிப்பான "One Foot on the Ground: A Life Told Through the Body" என்ற நூலை வெளியிட்டார். 2015ஆம் ஆண்டில் இசைநாடக அகாடமி விருதை அவர் பெற்றார். கவிஞர் K சச்சிதானந்தன் அவர்கள் நடப்பாண்டுக்கான (2019) TATA Literature Live! கவிஞர் என அறிவிக்கப்பட்டார்.

**9. நடப்பாண்டுக்கான (2019) இராஜாராம் மோகன் ராய் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பிரபல இதழாளர் யார்?**



A) அகில் ES

B) சௌரப் துக்கல்

C) P G உன்னி கிருஷ்ணன்

**D) குலாப் கோத்தாரி ☑**

✓ இராஜஸ்தான் பத்திரிகை குழுமத்தின் தலைவரான குலாப் கோத்தாரி, நடப்பாண்டுக்கான (2019) இராஜாராம் மோகன் ராய் விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார். பத்திரிகைத் துறையில் அவரது சிறந்த

பங்களிப்பை கௌரவிக்கும் விதமாக, தேசிய பத்திரிகை நாளன்று, இந்திய பத்திரிகை கவுன்சில் (PCI) அவருக்கு இந்த விருதை வழங்கி கௌரவிக்கும்.

**10. Harmonized System குறியீடு என்பது எந்தத் துறையுடன் தொடர்புடையது?**

A) காப்பீடு

B) கிராமப்புற வங்கி

**C) காதி ☑**

D) மருத்துவம்

- ✓ ஏற்றுமதியின்போது காதித் தயாரிப்புகளை பிரத்தியேகமாக வகைப்படுத்துவதற்காகவும், இந்தியாவில் தயாரிக்கப்படும் பொதுவான ஜவுளி தயாரிப்புகளிலிருந்து காதித் தயாரிப்புகளை தனியாகப் பிரித்து வகைப்படுத்துவதற்காகவுமாக மத்திய வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகமானது ஓர் ஒத்திசைந்த அமைப்புக் குறியீட்டை (Harmonized System Code – HS) வெளியிட்டுள்ளது.
- ✓ HS குறியீடு என்பது உலக சுங்க அமைப்பால் உருவாக்கப்பட்ட 6 இலக்கங்கள்கொண்ட ஓர் அடையாள குறியீடாகும். அது, சுங்க அதிகாரிகளால், தயாரிப்புகள் சர்வதேச எல்லைகளை கடக்க அனுமதிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. தயாரிப்புகளின் வகைப்பாட்டிற்கான ஒரு பன்னாட்டுப் பெயரிடல் முறையாகும் இது. சுங்க நோக்கங்களுக்காக வர்த்தகமயமாக்கப்பட்ட பொருட்களை பொதுவான அடிப்படையில் வகைப்படுத்துவதற்கு இது அனுமதிக்கிறது. 1974ஆம் ஆண்டில் நடந்த கியோட்டோ மாநாட்டில் உருவாக்கப்பட்ட இந்தக்குறியீடு, தற்போது 200க்கும் மேற்பட்ட நாடுகளால் பயன்படுத்தப்படுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தஞ்சாவூர் பெரியகோவிலில் மாமன்னர் இராஜராஜ சோழனின் 1034ஆம் ஆண்டு 'சதய விழா' சிறப்பாக கொண்டாடப்பட்டது.
- ✓ பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனதளவிலும், உளவியல் மற்றும் சட்டரீதியாக ஆலோசனைகள் வழங்கவும், உதவிபுரியவும் 'தோழி' என்ற திட்டத்தை சென்னை காவல் ஆணையர் A K விஸ்வநாதன் தொடங்கிவைத்தார். 'தோழி' அமைப்பில் செயல்படும் பெண் காவலர்களுக்கு நிர்பயா முத்திரையும், இளஞ்சிவப்பு வண்ணச் சீருடையும் வழங்கப்பட்டுள்ளது.

---